பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 20 சனிக்கிழமை 05.12.2020 கதிர் 260

## யாழ். குடாநாட்டில் 57,513 பேர் பாதிப்பு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தைத் தாக்கிய புரெவி புயல் மற்றும் அதன்பின்னர் பெய்த அடைமழை காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 17 ஆயிரத்து 243 குடும்பங்களைச் சேர்ந்த 57 ஆயிரத்து 513 பேர் பாதிப்படைந்துள்ளனர்

2

# மிக மோசமான சர்வாதிகார சிந்தனையில் செயற்படுகிறார் அமைச்சர் சரத் வீரசேகர!

### அவர் நாடாளுமன்றத்தில் இருப்பதற்கு தகுதியற்றவர் என்கிறார் சேனாதிராஜா



தமிழீழ விடுதலைப்புலிகளை அழித்ததைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இல்லாதொழிக்க வேண்டும் என்ற பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவின் கருத்து மிக மோசமான சர்வாதிகார, இராணுவமய சிந்தனையின் வெளிப்பாடாகும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற

2

## கண்டியில் இன்றும் நிலநடுக்கம்

கண்டியில் இன்றும் சிறிய அளவிலான நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

2

## ஐ.தே.கவின் பதில் செயலராக மல் செனரத்



ஐக்கிய தேசியக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக மல் செனரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராகச் செயற்பட்டு வந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம்

2

### தமிழர்களின் ஏகோபித்த கட்சியான

# கூட்டமைப்பை எவரும் தடை செய்ய முடியாது

### சம்பந்தன் காட்டம்



**தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அது கொண்ட கொள்கையில் - வரித்துக்கொண்ட இலட்சியத்தில் தடம்புரளாது பயணிக்கும். அதை எவரும் பிளவுபடுத்தவும் முடியாது தடை செய்யவும் முடியாது.**

2

## வெள்ளத்தில் மூழ்கியுள்ளது பல்கலை பெண்கள் விடுதி!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாகப் பெய்த கனமழை காரணமாக யாழ். பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

அத்தோடு பல்கலைக்கழகத்தின் இராமநாதன் விடுதியும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் அந்த வீதியால் பயணம் செய்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

2

## பிரமுகர் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 44 பேருக்கு கொரோனா வைரஸ் உறுதி

பிரமுகர் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 44 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தின் உள்ளகத் தகவல்களை மேற்கோள்காட்டி, சிங்கள இணையத்தளமொன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த 264 பேருக்கு இந்த வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாடு பூராகவும் உள்ள 85 பொலிஸ்

2

## வீதியில் மோட்டார் சைக்கிள் பந்தயம்: இரண்டு குழந்தைகளின் உயிர் காவு!

மொரட்டுவ - எகொடஉயன பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இரு குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கர்ப்பிணித் தாய் ஒருவர், 7 வயது மற்றும் ஒரு வயதுக் குழந்தைகளுடன் வீதிக் கடவையில், வீதியைக் கடக்க

2

## கொட்டித் தீர்த்த மழையால் வெள்ளத்தில் யாழ்ப்பாணம்

### நல்லூர் கந்தன் ஆலயப் பின் பக்க வீதியும் பாதிப்பு



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ். மாவட்டத்தில் நேற்றிரவு தொடக்கம் பெய்த கனமழை காரணமாக மாவட்டத்தின் பல பகுதிகள் மீண்டும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக நல்லூர் கந்தன் ஆலயத்தின் பின் பக்க வீதி முழுவதும் வெள்ளத்தில்

2

## யாழ். போதனா வைத்தியசாலையின் விடுதிக்குள்ளும் புகுந்தது வெள்ளம்!





(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ். நகரில் சரியான வடிகால் அமைப்பு வசதியின்மையால் போதனா வைத்தியசாலையின் சில விடுதிக் கட்டடங்கள் அடைமழையால் வெள்ளத்தில் மூழ்கின.

2

# வெள்ளத்தால் அவதியுற்ற மக்கள்





(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொட்டித் தீர்த்த அடைமழையால் குடாநாடு முழுவதும் இன்று அதிகாலை முதல் 5 மணிநேரம் சேவைகள் முடங்கும் நிலைமை காணப்பட்டது. யாழ். நகரின் மத்தியில் இருந்து கிராமங்கள் வரையில் வீதிகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியிருந்தன.

அதிகாலை 2 மணிக்கு ஆரம்பித்த அடைமழை காரணமாக மாவட்டம் முழுவதும் வெள்ளம் தேங்கியதோடு நீண்டமாலமாக

2

## கூட்டமைப்பை எவரும் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

'தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் அந்த இயக்கத்தின் அரசியல் கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப்புலிகளை மீளுருவாக்கம் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் கட்சியைத் தடை செய்தே தீருவோம்' என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போது எச்சரிக்கை விடுத்திருந்தார். இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு போதும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் கட்சியாகச் செயற்பட்டதில்லை. கூட்டமைப்பை விடுதலைப்புலிகள் ஆதரித்தார்கள் என்பதற்காக அதை விடுதலைப்புலிகளின் அரசியல் கட்சி என்று எவரும் அழைக்க முடியாது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அப்போது ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரச குழு பல தடவைகள் பேச்சுக்களை நடத்தியதை சரத் வீரசேகர உள்ளிட்ட ஆளுந்தரப்பினர் நினைவில்கொள்ள வேண்டும்.

கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சி என்றபடியாலேயே அன்று எம்முடன் மஹிந்த அரசு பேச்சு நடத்தியது. இன்றும் நாம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுடன் உண்மையான - நேர்மையான - நீதியான பேச்சுக்குத் தயாராகவே இருக்கின்றோம்.

இந்நிலையில், நாடாளுமன்றத்திலுள்ள ஆளுந்தரப்பினர் கருத்துக்களை வெளியிடும்போதும் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். வாய்க்கு வந்த மாதிரி இனவாத ரீதியில் கருத்துக்களை வெளியிடுவதை அவர்கள் தவிர்க்க வேண்டும். - என்றார்.

## மிக மோசமான .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்ற அவர் இவ்வாறு இறுமாப்புடன் பேசுவது அவர் நாடாளுமன்றத்தில் இருப்பதற்குத் தகுதியற்றவர் என்பதையே வெளிப்படுத்துகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் மீண்டும் விடுதலைப்புலிகள் மீளுருவாக்கம் பெற்றால் அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பொறுப்புக்கூற வேண்டும் எனவும் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றியபோது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்துரைக்கும் போதே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது பற்றி அவர் மேலும் கூறியதாவது: -

சரத் வீரசேகரவின் கருத்து மிகமோசமான சர்வாதிகார, இராணுவமய சிந்தனையின் வெளிப்பாடாகும். அவர் உலக வரலாற்றை அறியாமல் பேசுகின்றார். உலக நாடுகள் பலவற்றிலும் விடுதலைக்காகவும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகவும் இத்தகைய போராட்டங்கள் நடத்தப்பட்டிருப்பதுடன் அவற்றில் பல போராட்டங்கள் வெற்றியும் கண்டிருக்கின்றன.

இலங்கையில் தமிழினத்தின் உரிமைகளைப் பறித்து இராணுவத்தின் ஊடாக அவர்களை அடக்கி ஒடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசால் தமிழர்களின் அமைதிவழிப் போராட்டங்கள் அடக்கப்பட்டமையினாலேயே விடுதலைப்புலிகள் ஆயுதமேந்திப் போராடுகின்ற ஒரு மாபெரும் சக்தியாக இந்த நாட்டில் வளர்ந்தார்கள்.

எனவே, தமிழ் மக்களின் விடுதலை உணர்வையும் கொள்கையையும் சரத் வீரசேகரவினாலும் வேறு எந்தவொரு அரசுகளினாலும் அழித்துவிட முடியாது. தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றுள்ள சரத் வீரசேகர, விடுதலைப்புலிகளை அழித்ததைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இல்லாதொழிக்க வேண்டும் என்று இறுமாப்புடன் பேசுவது அவர் நாடாளுமன்றத்தில் இருப்பதற்குத் தகுதியற்றவர் என்பதையே வெளிப்படுத்துகின்றது - என்றார்.

## யாழ். குடாநாட்டில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன் 2 ஆயிரத்து 535 வீடுகள் சேதமடைந்துள்ளன எனவும், அவற்றில் 62 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன எனவும் யாழ். மாவட்ட செயலகத்தால் அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு இன்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

அதேவேளை, பாதிக்கப்பட்டவர்களில் 1,072 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 687 பேர் 33 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெள்ளத்தில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா அச்சம் காரணமாக பல்கலைக்கழகத்தின் கற்றல் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டு மாணவர்கள் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர.

இதனால் விடுதி பூட்டப்பட்டிருக்கும் நிலையில் விடுதியில் இருந்த மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. அத்தோடு விடுதிக்குள் மின்சார இணைப்பு அறுந்து தொங்கிக் கொண்டிருக்கின்றது.

இதனால் குறித்த வீதியால் பயணம் செய்பவர்கள் பெரும் அச்சத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

## கண்டியில் இன்றும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை 7.30 மணியளவில் இந்த நிலநடுக்கம் இடம்பெற்றுள்ளது எனப் புவிச் சரிதவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி கண்டி மாவட்டத்தின் திகன, அம்பாக்கோட்டை, கெங்கல்ல உள்ளிட்ட பகுதிகளில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் 4 ஆவது தடவையாகப் பதிவாகிய நிலநடுக்கம் இதுவாகும்.

ஏற்கனவே ஒகஸ்ட் 29ஆம் திகதி இரவு ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து இன்று வரை 4 தடவைகள் நிலநடுக்கம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.கவின் பதில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜினாமா செய்ததையடுத்தே, பதில் பொதுச் செயலாளராக மல் செனரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

இம்மாதம் 31ஆம் திகதி வரையே அவர் பதில் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

முன்னதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக மல் செனரத் செயற்பட்டு வந்துள்ளார்.

அண்மையில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மல் செனரத் ஆகியோருக்கிடையே நடைபெற்ற கலந்துரையாடலின் அடிப்படையிலேயே, இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மல் செனரத் வடமேல் மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்பட்டு வந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பிரமுகர் பாதுகாப்புப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்களில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய பொலிஸ் திணைக்களத்துக்குள் மொத்தமாக 1,277 பேருக்குக் கொரோனா தொற்றியுள்ளது. இவர்களில் 925 பேர் குணமடைந்துள்ளனர். அத்துடன் 352 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## வீதியில் மோட்டார் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சித்தபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றிலேயே குறித்த மூவரும் மோதுண்டுள்ளனர்.

விபத்தில் காயமடைந்த மூவரும், பாணந்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், குழந்தைகள் இருவரும் உயிரிழந்துள்ளனர்.

காயமடைந்த கர்ப்பிணித் தாய் மேலதிக சிகிச்சைகளுக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இரவு வேளையில் நாளாந்தம் குறித்த பகுதியில் இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ஈடுபடுகின்றனர் என்று பிரதேச மக்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

பிரதான வீதியில் அதி வலுக் கொண்ட மோட்டார் சைக்கிள்களில் சிலர் நாளாந்தம் மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ஈடுபடுகின்றனர் எனவும், இது தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

## யாழ். போதனா வைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில வைத்திய சேவைகள் தற்காலிகமாக வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டு சிரமத்தின் மத்தியில் அந்தச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை எதிர்வரும் காலங்களில் எடுத்து இவ்வாறான அனர்த்தம் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்று நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வெள்ளத்தால் அவதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீர் தேங்காத பகுதிகளிலும் அதிக நீர் புகுந்துகொண்டது. இதனால் பல ஆயிரம் குடும்பங்கள் அதிகாலை 3 மணியில் இருந்தே நித்திரை இன்றி நீரில் கால்கடுக்கக் காத்திருந்தனர்

இதனால் பாதிக்கப்பட்ட பல ஆயிரம் குடும்பங்களுக்கும் காலையில் பலரும் பாண் கொடுத்து உதவினர்.

பிரதேச செயலகங்கள் ஊடாகவும், அரசியல் கட்சிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் மணிவண்ணன் தரப்பினர் ஆகியோர் ஊடாகவும் இந்த உதவிகள் வழங்கினர் .

இவ்வாறு ஏற்பட்ட அதிக மழை காரணமாக மாவட்டம் முழுமையாக ஈரத்தன்மை காணப்படுகின்றது. வீட்டு வளவுகளில் அதிக நீர் தேங்கி நிற்பதாலும் குளிரின் காரணமாக காய்ச்சல், தடிமல், இருமல் போன்ற நோய்த் தொற்றும் அபாயமும் நுளம்பு பெருகும் சூழலும் காணப்படுகின்றது.





## கொட்டித் தீர்த்த .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூழ்கியுள்ளது.

நல்லூர் ஆலயத்தை சுற்றியும் நல்லை ஆதீனத்தைச் சூழவும் வெள்ளம் தேங்கிக் கிடக்கின்றதால் ஆலயத்துக்குச் செல்பவர்களும், குறித்த வீதியால் பயணம் செய்பவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் புரெவி புயல் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் மக்கள் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றிரவு முதல் தொடர்ச்சியாகப் பெய்த மழையால் மாவட்டத்தில் பல பகுதிகள் மீண்டும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக யாழ். நகரம் உட்பட தாழ்நிலப் பகுதிகளில் மீண்டும் வெள்ளம் புகுந்துள்ள நிலையில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, வீதிகளில் பயணம் செய்பவர்களும் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளனர்.









காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தோற்றுப் போன நாடாவோமா?

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஓர் உண்மையை – யதார்த்தத்தை – நிஜத்தை – நாடாளுமன்றத்தில் இடித்துரைத்திருக்கின்றார். அது நிச்சயம் ஆட்சித் தரப்பின் –அதிகார மையத்தின் – காதுகளில் விழுந்திருக்கும்.

ஆனால், அதிகார பீடம் அதனைக் கருத்தில் எடுத்துத் தன்னைத் திருத்திக் கொள்ளுமா என்பது கேள்விக் குறியே.

*“சர்வதேச நிலைப்பாடுகளை மதிக்காமல், பொருளாதார அபிவிருத்தியைக் கொண்டு செல்லவே அரசு முயற்சிக்கின்றது. அரசின் இந்த நிலைப்பாடு தொடர்ந்தால், எமது நாடும் வட கொரியாவுக்கு நிகரான பொருளாதார நிலைக்கே செல்லும். இது அரசின் இயலாமையாகும். இது வங்குரோத்து அரசு – படுதோல்வியுற்ற – அரசாகும்.”*

– இப்படி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் முழங்கியிருக்கின்றார்.

அவர் ‘வங்குரோத்து அரசு’, ‘படுதோல்வியுற்ற அரசு’ என்றெல்லாம் குறிப்பிடுவது அரசாங்கத்தையா, நாட்டையா என்று கேள்வி எழுகின்றது.

நாடும் இதை வழி நடத்துகின்ற ஆட்சிப் பீடமும் போகின்ற போக்கைப் பார்க்கும் போது ‘இது படுதோல்வியுற்ற நாடு’ (Faile State) என்பது விரைவில் துலாம்பரமாகும் என்பது தெளிவாகிறது.

உலக நாடுகளிடமிருந்து பெருமளவு தொகையை – பல்லாயிரம் கோடி ரூபாக்களை – கடனாகப் பெற்று ஏப்பமிட்ட இலங்கை, அந்தக் கடன் தொகைக்குரிய வட்டியையும் தவணைப் பணத்தையும் செலுத்த முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

இந்த ஆண்டுக்கான தவணைப் பணத்தை செலுத்த முடியாமல் போகும் போது, கடன் இறுக்க வழியற்ற நாடாக – தோற்றுப் போன நாடாக – இலங்கை அறிவிக்கப்படலாம் என இந்த ஆண்டின் முற்பகுதியில் எதிர்வு – அச்சம் – கூறப்பட்டது.

ஆனால் கடைசி நேரத்தில் சீனா புதிதாக வழங்கிய ஒரு தொகைக்கடன் மூலம் இந்த வருடத்துக்கான தவணைக் கட்டணத்தைச் செலுத்தி, நிமிரும் நிலைக்கு நாடு வந்துள்ளது.

அதாவது, புதிது புதிதாகக் கடன்களை வாங்கிப் பழைய கடன்களை அடைக்கும் தந்திரோபாயம்.

‘தோற்ற நாடு’ என்ற பெயரைச் சூடிக் கொள்வதை இந்தத் தந்திரோபாயம் மூலம் தாமதிக்கச் செய்ய முடியும். ஆனால் காலம் தாழ்த்தத் தாழ்த்த அந்த சுருக்கு மேலும் இறுக்கமாக விழும். அவ்வவுதான்.

சர்வதேச நிலைப்பாடுகளை மதிக்காமல் பொருளாதார அபிவிருத்திகளைக் கொண்டு செல்லவே அரசு முயற்சிக்கின்றது என்று குற்றம் சுமத்தும் எதிர்க்கட்சித் தலைவர், அரசின் பொருளாதாரக் கொள்கை முறைமைகளைத்தாம் விமர்சிக்கின்றார். வேறு மிக முக்கியமான விடயங்களை விட்டு விட்டார். அல்லது வேண்டுமென்று தவிர்த்து விட்டார்.

நாட்டின் பொருளாதாரக் கொள்கைப் போக்குகள், பின்பற்றும் நடைமுறைகள், வர்த்தக ரீதியான பண்பியல்புகள் போன்றவை பொருளாதாரம் தொடர்பில் சர்வதேசத்தின் நிலைப்பாடுகள் மற்றும் போக்குகளில் கணிசமான தாக்கத்தைச் செலுத்துமாயினும், அதனையும் தாண்டி, இவ்விவகாரத்தில் தாக்கம் செலுத்தக் கூடிய பிறிதொரு விடயமும் உண்டு.

அதை வெளிப்படையாகக் குறிப்பிட எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தவறிவிட்டார். எனினும் அந்த விவகாரத்தை ஒட்டிய ஒரு நாட்டை உதாரணத்துக்கு இழுத்தமை மூலம் இவ்விடயத்தில் தனக்குள்ள புரிதலை அவர் கோடி காட்டியிருக்கின்றார் என்றே கொள்ள வேண்டும்.

அது சர்வதேச ரீதியில் அதிகம் மதிக்கப்படும் மனித உரிமைகள் விவகாரமாகும்.

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிடுகின்றமை போல இலங்கையின் பொருளாதாரமும் வட கொரியா போன்ற நிலைமையை எட்டுவது தவிர்க்க முடியாததாகும்.

தன்னுடைய மனித உரிமைகள் நிலைமை, சர்வதேச ரீதியில் அணி திரளும் தரப்புகள், இலங்கையின் விடயத்தில் குறிப்பிட்ட நாடுகளின் அதீத பங்களிப்பு போன்றவை தொடர்பில் இலங்கை தன்னைத் திருத்திக் கொள்ளாவிட்டால் – மாற்றிக் கொள்ளா விட்டால் – வடகொரியாவைக் கையாளுவது போன்றுதான் இலங்கையையும் மேற்குலகு கையாளும் நிலைமை வரும் என்பது நிச்சயம்.

அப்படி நெருக்கடிகள், தீவிரமடையும் போது இலங்கை ‘தோற்றுப் போன நாடு’ ஆக மாறுவதும் தவிர்க்க முடியாத நிகழ்வாக அரங்கேறும்.

உலகச் செல்நெறிகள், மனித உரிமைகள் தொடர்பாக சர்வதேசத்தின் கவனிப்பு முறைமைகள் போன்றவற்றைக் கவனத்தில்எடுக்காது, தான்தோன்றித்தனமாக இலங்கை நடந்து கொள்ளுமானால் –

தன்னுடைய பௌத்த, சிங்களப் பேரினவாதத் திமிர்ப் போக்கில் நடந்து கொள்ளுமானால் –

சர்வதேசத்தினால் விபரீதமாகக் கையாளப்பட்டு, தோற்றுப் போன நாடாக இலங்கை மாறுவது தவிர்க்க முடியாத கட்டாயமாகவே இருக்கும்.

# புலிகளின் தாக்குதலில் சரத் பொன்சேகா கொல்லப்பட்டிருந்தால் நல்லாய் இருக்கும்!

## சிவாஜிலிங்கம் பதிலடி



மாவீரர் தினத்தன்று புரெவி வீசியிருக்கலாம் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சொன்னமையில் இருந்து அவருடைய கொடூர மனநிலையை வெளிப்பட்டுள்ளதாக வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதனால், விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படை நடத்திய தாக்குதலில் சரத் பொன்சேகா கொல்லப்பட்டிருப்பாரானால் நல்லாயிருக்கும் என எண்ணும் அளவுக்கு அவர் தமிழ் மக்களின் மனநிலைய மாற்றுவதாக சிவாஜிலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான யாழில் நேற்று (வெள்ளிக்கிழமை) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர்:–

நேற்றைய தினம் (கடந்த வியாழக்கிழமை) நாடாளுமன்றத்தில் முன்னாள் இராணவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்த கருத்துக்கள் தமிழ் மக்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளன.

அதில், குறிப்பாக புரெவி புயல் நவம்பர் மாதம் 27ஆம் திகதி மாவீரர் தினத்தன்று வீசியிருக்கலாம் என்று சொன்னமையில் இருந்து அவருடைய கொடூர மனநிலை வெளிப்பட்டுள்ளது.

கொடூர மன நிலையில் இனப்படுகொலை, போர்க் குற்றங்கள் புரிந்தவர், இராணுவம் போர்க் குற்றத்தைப் புரிந்ததென்று இதே இராணுவத் தளபதி கூறியிருக்கிறார்.

இலங்கையில் இனப்படுகொலை, போர்க் குற்றங்கள் நடைபெற்றுள்ளன எனவும் 40 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு குழு தெரிவித்துள்ளது.

அதேபோல், இன்னொரு குழு 70 ஆயிரம் பேர் கொல்லப்பட்டும் கணக்கில் வராமலும் உள்ளது என்றும் கூறியுள்ளது.

ஆகவே, இவ்வாறு கொன்றுவிட்டு ஏழாயிரம் பேர் கொல்லப்பட்டனர் எனச் சொல்லுகின்றமை தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற இழிவுபடுத்துகின்ற செயலாகும்.

இதைவிட இன்றைக்கு இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவினுடைய கூற்றைப் பார்த்தால், இவர், புலிகளுடைய தற்கொலைப் படைத் தாக்குதலிலே கொல்லப்பட்டிருப்பாரானால் நல்லாயிருக்கும் என்று மக்கள் நினைக்கக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கிறது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரித்தமைக்காக தமிழ் மக்கள் வெட்கித் தலைகுனிகின்றார்கள். – என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# கிளிநொச்சிப் பாடசாலைகள் திங்கள் முதல் திறக்கப்படும்!

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக வடக்கு மாகாணத்தில் தற்காலிகமாக விடுமுறை வழங்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் மற்றும் காரைநகர் இந்துக் கல்லூரி ஆகியன எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் இதற்கான அறிவிப்பை மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்கியுள்ளார்.

கிளிநொச்சியில் தொண்டமான் நகரைச் சேர்ந்த முதியவர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நவம்பர் 23 ஆம் திகதி கண்டறியப்பட்டது.

இதனால், அவருக்கு தொற்று ஏற்படக் காரணம் மற்றும் அவருடன் தொடர்புடையோரைக் கண்டறியும் வகையில் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு நவம்பர் 24 ஆம் திகதி தொடக்கம் தற்காலிக விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய தரம் ஆறு தொடக்கம் தரம் 13 வரையிலான மாணவர்களுக்கு நவம்பர் 22 ஆம் திகதி முதல் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் டிசெம்பர் 7ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவர்களுக்கு பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, காரைநகரில் கொரோனா வைரஸ் தொற்றுள்ள ஒருவர் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவருடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்த ஆசிரியர் ஒருவர் கற்பிக்கும் காரைநகர் இந்துக் கல்லூரி நவம்பர் 30 ஆம் திகதி தொடக்கம் தற்காலிகமாக மூடப்பட்டது.

எனினும் ஆசிரியருக்கு கொரோனா தொற்று இல்லையென அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் காரைநகர் இந்துக் கல்லூரியும் எதிர்வரும் ஏழாம் திகதி தொடக்கம் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஈஸ்டர் குண்டு தாக்குதல் விவகாரம் அரசின் செயற்பாடுகள் மந்தகதியில்!

## நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெர்னாண்டோ குற்றச்சாட்டு

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணையில் அரசாங்கம் மந்தகதியில் செயற்படுவதாக எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இன்று சனிக்கிழமை இடம்பெற்ற குழுநிலை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குறித்த குழுநிலை விவாதத்தில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

இலங்கையின் சுற்றுலாத்துறை தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு கொரோனா மட்டுமன்றி, ஈஸ்டர் தாக்குதலும் பிரதான காரணமாக இருக்கிறது.

இதனை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக தற்போது அரசாங்கம் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

எனினும், கொழும்பு பேராயர் கர்தினல் மெல்கம் ரஞ்ஜித் ஆண்டகை, இந்த விசாரணை தொடர்பாக கவலை வெளியிட்டிருந்தார். இதனை அரசாங்கம் மூடி மறைத்துவிடக் கூடாது என்று வலியுறுத்தியிருந்தார்.

ஈஸ்டர் தாக்குதல் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என வலியுறுத்தியே இந்த அரசாங்கத்தை மக்கள் ஆட்சிக்கு அமர்த்தினார்கள்.

எனினும், தேர்தல் காலத்தின்போது கூறிய வேகத்தைவிட அரசாங்கம் தற்போது குறைவாகவே செல்கிறது என்பதே மக்களின் பொதுவான நிலைப்பாடாக இருக்கிறது.

அரசியல் அழுத்தங்கள் இன்றி இந்த விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்பதுதான் பேராயர் உள்ளிட்ட அனைவரதும் கோரிக்கையாகும்.

இதனை நாம் அரசியலாகக் கருதவில்லை. இதனை வைத்து எவரும் அரசியல் செய்யவும் முற்படக்கூடாது. எனினும், யார் இந்தக் குண்டுத் தாக்குதலின் பின்னணி என்ற உண்மை தெரியவேண்டும். இது ஒன்றுதான் எமது நோக்கமாகும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜெயலலிதாவின் 4 ஆம் ஆண்டு நினைவேந்தல்: முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அஞ்சலி

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 4ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழக மக்களால் இன்று (சனிக்கிழமை) நினைவு கூறப்பட்டது.

ஆனால் இம்முறை கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வீடுகளிலேயே விளக்கேற்றி, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு அஞ்சலி செலுத்துமாறு, முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜெயலலிதாவின் 4 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சென்னை மெரினாவிலுள்ள நினைவிடத்தில் மலர்தூவி, அஞ்சலி செலுத்திய பின் அவர் இவ்வாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், அ.தி.மு.க. நிர்வாகிகளும் தொண்டர்களும்



தமது இல்லங்களில் விளக்கு ஏற்றி வைத்து, அவரது திருவுருவப் படத்தின் முன் அன்போடு வணங்க வேண்டும் எனவும் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஜெயலலிதாவின் நினைவு தினத்தை முன்னிட்டு, துணை முதலமைச்சர் பன்னீர்செல்வம் உறுதி மொழி வாசிக்க, மெரினா நினைவிடத்திற்கு வருகை தந்திருந்த கட்சியினர் அதை திரும்ப கூறினர்.

இயற்கை பேரிடர் நேரங்களில் சுற்றிச் சுழன்று அல்லும் பகலும் அயராது பாடுபட்டவர் ஜெயலலிதா, அவர் காட்டிய வழியில் பல்வேறு இயற்கை பேரிடர் நேரங்களில் மக்களுக்காக தமிழக அரசு பணியாற்றுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## எதிரி விமானம் தாக்கி அழிக்கும் ஆகாஷ் ஏவுகணைகள் சோதனை

எதிரி விமானங்களை தாக்கி அழிக்கும் 10 ஆகாஷ் ஏவுகணைகளை செலுத்தி இந்திய விமானப்படை சோதனை மேற்கொண்டது.

ஆந்திராவின் சூர்யலங்கா பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த சோதனையில் ஏவுகணைகள் இலக்குகளை துல்லியமாக தாக்கி அழித்தன. சீன விமானங்கள் இந்திய எல்லைக்குள் அத்துமீறினால் பதிலடி கொடுக்க கிழக்கு லடாக் எல்லைக் கட்டுப்பாட்டு பகுதியில் ஏற்கனவே இந்த ஏவுகணைகள் தயார் நிலையில் உள்ளன.

ஆகாஷ் ஏவுகணையை அதிக செங்குத்து உயரத்திலுள்ள இலக்கை தாக்கும் விதத்தில் டி.ஆர்.டி.ஓ. மேம்படுத்தி வருகிறது. மேலும் வீரர்கள் தோளில் வைத்து ஏவக்கூடிய இக்லா ஏவுகணைகளும் சோதனை செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.



## இந்தியாவுக்காக உருவான ஆர் – 60 ரோமியோ ஹெலிகொப்டரின் படம் வெளியாகியுள்ளது!





இந்திய கடற்படைக்காக தயாரித்துவரும் எம்.எச் – 60 ரோமியோ ஹெலிக்கொப்டரின் முதல் படத்தை, அமெரிக்காவின் லொக்ஹீட் மார்டின் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

பல்முனை பயன்பாடு வசதிகொண்ட எம்.எச் – 60 ரோமியோ ஹெலிகொப்டர், நீர்மூழ்கிக் கப்பல்களைத் தாக்கியழிக்கும் திறன் கொண்டது.

இந்நிலையில், இந்திய கடற்படைக்காக மொத்தம் 24 ஹெலிகொப்டர்களை இந்திய மதிப்பில் 18 ஆயிரத்து 200 கோடி ரூபா மதிப்பில் வாங்க அமெரிக்காவுடன் 2018 ஆம் ஆண்டு இந்தியா ஒப்பந்தம் மேற்கொண்டது.

இதன்படி, இரண்டு ஆண்டுகளில் இந்தியாவிடம் ஹெலிகொப்டர்களை ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில், இந்திய கடற்படையின் பிரத்தியேக வண்ணத்துடன் அதன் முதல் படம் வெளியாகியுள்ளது.

## வலையில் சிக்கியது திமிங்கில சுறா மீனவர் முயற்சியால் மீண்டும் கடலில்!

கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் வலையில் சிக்கிய அரிய வகை திமிங்கல சுறா மீனை மீண்டும் கடலில் மீனவர்கள் விடுவித்த வீடியோ வைரலாகி வருகிறது.

புயல் எச்சரிக்கை காரணமாக ஆழ்கடலுக்கு செல்லாத மீனவர்கள் சிலர், கடந்த வெள்ளிக்கிழமை சங்குமுகத்தில் கடற்கரையோரம் உள்ள கடலில் மீன்பிடித்து கொண்டிருந்தனர்.

அப்போது வலை ஒன்றில் திமிங்கல சுறா ஒன்று சிக்கிக் கொள்ளவே, அதை சுமார் 60 மீனவர்கள் ஒன்றாக தள்ளியும் இழுத்தும் சென்று கடலில் விட்டனர். அங்குள்ள செய்தியாளர் ஒருவர் இக்காட்சியை செல்போனில் வீடியோ எடுத்து சமூக இணையத்தளத்தில் வெளியிடவே அது வைரலாகி வருகிறது.



## தடுப்பூசி போட்ட அமைச்சரை பீடித்தது கொரோனா தொற்று!

சோதனை அடிப்படையில் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்ட அரியானா உள்துறை அமைச்சருக்கு இரண்டு வாரங்களுக்குப் பிறகு வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

67 வயதான அனில் விஜ், கொரொனா தொற்றை அடுத்து, அம்பாலாவில் உள்ள அரசு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். கோவாக்சின் தடுப்பூசி போட்ட பிறகும் கொரோனா தொற்று ஏன் ஏற்பட்டது? என சுகாதார அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது. தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டு பல நாள்களுக்குப் பிறகே நோய் எதிர்ப்புத் திறன் உருவாகும்.

ஆனால் அமைச்சர் அனில் விஜ் முதல் டோசை மட்டுமே போட்டுக் கொண்டுள்ளமையால் அவருக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனில் விஜுவிற்கு கடந்த 20 ஆம் திகதி தடுப்பூசி போடப்பட்டது.

## தமிழகத்தில் இரு நாள்களுக்கு மழை தொடரும் என்கிறது வானிலை மையம்

மன்னார் வளைகுடா பகுதியில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்தத்தாழ்வு மண்டலம் வலுவிழந்தது. இதனால் தமிழகத்தில் 2 நாள்களுக்கு மழை நீடிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

மன்னார் வளைகுடா கடல் பகுதியில் நிலை கொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தொடர்ந்து அதே இடத்தில் வெள்ளிக்கிழமை மாலை வரை நிலவியது.

இது காற்றழுத்தத்தாழ்வு மண்டலமாக வலுவிழந்து, மெதுவாக மேற்கு – தென்மேற்கு திசையில் நகர்ந்தது. மேலும் வலுவிழந்து, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக ராமநாதபுரம் வழியாக மேற்கு – தென்மேற்கு திசையில் தெற்கு கேரள பகுதியை நோக்கிச் செல்லும்.

இதன்காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் அநேக இடங்களில் சனி, ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரண்டு நாள்கள் மிதமான மழை பெய்யக்கூடும்.

நீலகிரி, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் இன்று சனிக்கிழமை இடியுடன் கூடிய பலத்த மழை முதல் மிக பலத்த மழையும், திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், சேலம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய பலத்த மழையும் பெய்யக்கூடும். இதுதவிர, ஏனைய மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புகர் பகுதிகளில் சனிக்கிழமை மிதமான மழையும், அவ்வப்போது பலத்த மழையும் பெய்யக்கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டலத் தலைவர் எஸ்.பாலச்சந்திரன் தெரிவித்தார்.


# கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1989.08.06
மதம் - வேதம் V - RC
நட்சத்திரம் - அத்தம்
செவ் - -------
பாவம் - -------
கல்வி - A/L
தொழில் - சிங்கர் கம்பனி
எதிர்பார்ப்பு - சாதாரண RC பெண் தேவை

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1990.02.04
மதம் - வேதம் RC
நட்சத்திரம் - ------
பாவம் - -------
சூ/செவ் - ------
கல்வி - சித்த மருத்துவம்
தொழில் - சித்த மருத்துவர்
எதிர்பார்ப்பு - RC பெண் உத்தியோகம் தேவை

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

# தனது தேசியக் கொடியை நிலவில் நாட்டியது சீனா!

நிலவில் தனது தேசியக் கொடியை சீனா நாட்டியுள்ளது. நிலவில் பாறை மற்றும் மணல் மாதிரிகளைச் சேகரித்து வரச் சென்ற சீனாவின் சாங்கே -5 விண்கலம் அங்கிருந்து புறப்பட முன்னர் சீனாவின் கொடியை நாட்டியுள்ளது.

அமெரிக்கா நிலவில் தனது தேசியக் கொடியை முதன் முதலில் நிலவில் நாட்டி சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் சீனா தனது தேசியக் கொடியை நிலவில் நாட்டியுள்ளது.

நிலவின் மேற்பரப்பில் காற்றில்லாமல் அசைவற்று இருக்கும் ஐந்து நட்சத்திரங்களைக் கொண்ட சீனாவின் செங்கொடி பறக்கும் படத்தை சீனாவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான சீன தேசிய விண்வெளி நிர்வாகம் வெளியிட்டுள்ளது.

இந்த படங்கள் கடந்த வியாழக்கிழமை நிலவின் பாறை மாதிரிகளுடன் அங்கிருந்து புறப்படுவதற்கு முன்னர் சாங்கே - 5 விண்கலத்தின் கமரா மூலம் எடுக்கப்பட்டது.

முந்தைய இரண்டு சீன நிலவுப் பயணங்களில் கைவினைப் பூச்சுகளால் ஆன கொடிகள் பயன்படுத்தப்பட்டன. எனவே அவற்றை நிலவில் நாட்ட முடியவில்லை.

1969 - ஆம் ஆண்டு அமெரிக்கா நிலவுக்குக் அனுப்பிய அப்பல்லோ - 11 விண்வெளித் திட்டத்தின் போது நிலவில் அமெரிக்காவின் முதல் கொடி நாட்டப்பட்டது. எட்வின் பஸ் ஆல்ட்ரின் நிலவில் அமெரிக்காவின் முதல் கொடியை நாட்டினார்.

ஆல்ட்ரின், அமெரிக்க கொடியை, அப்பல்லோ - 11 விண்கலத்துக்கு அருகிலேயே நாட்டினார். விண்



கலம் சந்திரனில் இருந்து புறப்படும் போது தான் நாட்டிய அமெரிக்கக் கொடி சேதமாகி இருக்க அதிக வாய்ப்புகள் இருப்பதாகக் அவர் கூறினார்.

1972 ஆம் ஆண்டு வரை அடுத்தடுத்து நிலவுக்குப் பயணித்த ஐந்து விண்வெளித் திட்டங்களின்போது மேலும் ஐந்து அமெரிக்கக் கொடிகளை நிலவில் அமெரிக்கா நாட்டியது.

அமெரிக்கா நாட்டிவைத்த கொடிகளில் ஐந்து கொடிகள் அப்படியே இருப்பதாக, செயற்கைக் கோள் படங்கள் காட்டுவதாக கடந்த 2012 ஆம் ஆண்டு நாசா குறிப்பிட்டது. சூரியனின் வெளிச்சத்தால் இந்த கொடிகள் நிறமிழந்து வெளுத்துப் போயிருக்கலாம் என நிபுணர்கள் ஊடகங்களிடம் குறிப்பிட்டார்கள்.

இதேவேளை, சீனா நிலவில் நாட்டியுள்ள கொடி 2 மீற்றர் அகலமும் 90 சென்டிமீட்டர் உயரமும் சுமார் ஒரு கிலோ எடையும் கொண்டது எனவும் சீன விண்வெளி ஆய்வு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# 2021 ஆம் ஆண்டுக்குள் 500 மில்லியன் தடுப்பூசி!

## மாடர்னா நிறுவனம் அறிவிப்பு




அடுத்த ஆண்டு இறுதிக்குள் 500 மில்லியன் டோஸ் கொரோனா தடுப்பு மருந்து தயாரிக்கப்படும் என மாடர்னா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்டீபன் பான்செல் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த மாடர்னாநிறுவனம்கொரோனா வைரஸுக்கு எதிரான ஒரு தடுப்பூசியை உருவாக்கி உள்ளது. இந்த தடுப்பூசி 95 சத வீதம் கொரோனா வைரஸை அழிப்பதில் பலனளிப்பதாகத் தெரிவித்துள்ளது.

இதையடுத்து தடுப்பூசியை அவசர பயன்பாட்டுக்கு அனுமதி அளிக்கக் கோரி அமெரிக்க உணவு மற்றும் மருந்து கழகம், ஐரோப்பிய சுகாதார துறையிடம் மாடர்னா நிறுவனம் விண்ணப்பித்து இருக்கிறது.

இதற்கிடையே, மாடர்னா நிறுவன தடுப்பூசி குறைந்தது 3 மாதங்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கும் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், 2021 ஆம் ஆண்டுக்குள் 500 மில்லியன் டோஸ் தடுப்பூசி தயாரிக்க முடியும் என மாடர்னா நிறுவனம் தெரிவித்துள்ளது.

# குவைத்தில் நாடாளுமன்ற தேர்தல் வாக்களிப்பு இன்று!

குவைத்தில் இன்று சனிக்கிழமை நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு நடைபெறுகிறது.

குறைந்த எண்ணெய் விலை மற்றும் கொரோனா வைரஸ் தொற்றுநோயால் ஏற்பட்ட பணப்புழக்க நெருக்கடியை அரசாங்கம் எதிர்கொண்டுள்ள நேரத்தில் இந்தத் தேர்தல் நடைபெறுகின்றது.

அத்துடன், வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை ஈடுசெய்ய, மாநில நிதிகளை அரசு அதிகரிக்க முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் கொரோனா நெருக்கடி காரணமாக வேட்பாளர்கள் இணையம், தொழில்நுட்பத் தொடர்பாடல் மூலம் தமது பிரசாரங்களை மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை, குவைத்தில் இன்றைய நிலைவரப்படி கொரோனா தொற்றால் ஒரு லட்சத்து 43 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டும் 900 பேர் மரணித்தும் உள்ளனர்.

இந்நிலையில், இம்முறை தேர்தலில் வாக்களிப்பு வீதம் குறையும் வாய்ப்பு உள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

# பிரித்தானியாவிடம் மன்னிப்புக் கோரினார் அமெ. கொரோனா தடுப்புக் குழு தலைவர்!

பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் விவகாரத்தில் பிரித்தானியா அவசரப்பட்டு முடிவெடுத்துவிட்டதாகக் கூறியதற்கு அமெரிக்க கொரோனா தடுப்புக் குழு தலைவர் அந்தோணி ஃபாசி மன்னிப்புக் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அமெரிக்க கொரோனா தடுப்புக் குழு தலைவர் அந்தோணி ஃபாசி கூறுகையில்:-

கொரோனா தடுப்பூசி விவகாரத்தில் நான் கூறிய கருத்துகளை வைத்து, பிரித்தானியா அதிகாரிகளின் செயற்பாட்டை நான் விமர்சிப்பதாகத் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது. உண்மையில், பிரித்தானியாவின் சுகாதாரத் துறை அதிகாரிகள் மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளது.

உண்மையில், மருந்துகளுக்கு அங்கீகாரம் அளிப்பதில் பிரித்தானியா கையாளும் நடைமுறைகளுக்கும் அமெரிக்கா கையாளும் நடைமுறைக்கும் இடையே வேறுபாடு உள்ளது. பிரித்தானியாவைவிட அமெரிக்காவில் மருந்துகளுக்கு அங்கீகாரம் கிடைக்க அதிக காலம் பிடிக்கும் என்பதைத்தான் நான் தெரிவித்தேன். - எனக் கூறினார்.

பைஸர் - பயான்டெக் நிறுவனங்கள் உருவாக்கியுள்ள கொரோனாத் தடுப்பூசிக்குக்கு பொதுப் பயன்பாட்டு அங்கீகாரத்தை பிரித்தானியாவின் மருந்துகள் ஒழுங்காற்று அமைப்பு முதல் முறையாக அங்கீகாரம் அளித்துள்ளது.

மிகவும் கவனமாக ஆய்வுகள் செய்த பிறகே இந்த அங்கீகாரத்தை வழங்கியதாக அந்த அமைப்பு தெரிவித்தது.

எனினும், பைசரின் கொரோனா தடுப்பூசியின் பாதுகாப்பு, செயற்திறன் தொடர்பாக அந்தோணி ஃபாசி சந்தேகம் எழுப்பினார்.

அந்தத் தடுப்பூசியின் தரம் பற்றி அமெரிக்க அதிகாரிகள் ஆய்வு செய்யும் அளவுக்கு பிரித்தானியா அதிகாரிகள் செய்யவில்லை என்றும் அவர் விமர்சித்திருந்தார். ஃபைஸர் தடுப்பூசிக்கு அங்கீகாரம் அளிக்கும் விவகாரத்தில் பிரித்தானியா அவசர முடிவை எடுத்துள்ளதாகவும் அந்தோணி ஃபாசி கூறினார்.

அடுத்துவரும் சில தினங்களுக்குப் பிறகு பிரித்தானியா முழுவதும் பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்த அந்த நாட்டு பொது சுகாதாரத் துறை ஆயத்தமாகி வருகிறது.

# 24 மணிநேரத்தில் 2 லட்சத்தை தாண்டியது அமெரிக்காவின் கொரோனா தொற்றாளர்கள்!

அமெரிக்காவில் அசுரவேகத்தில் பரவிவரும் கொரோனா வைரஸ் (கொவிட் - 19) பெருந் தொற்றால், நாளொன்றுக்கான அதிகபட்ச பாதிப்பு எண்ணிக்கை பதிவாகியுள்ளது.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் வைரஸ் தொற்றால் இரண்டு லட்சத்து 35 ஆயிரத்து 272 பேர் பாதிக்கப்பட்டமையோடு, இரண்டாயிரத்து 718 பேர் உயிரிழந்துள்ளனர்.

முன்னதாக மூன்று முறை நாளொன்றுக்கான பாதிப்பு, அமெரிக்காவில் லட்சத்துக்கும் மேற்பட்டோரை கடந்திருந்த போதும், இதுவே இதுவரை பதிவான நாளொன்றுக்கான அதிகப்பட்ச பாதிப்பு எண்ணிக்கை ஆகும்.

உலகளவில் கொவிட் -19 தொற்றால் அதிக பாதிப்பு மற்றும் உயிரிழப்பை சந்தித்த முதல் நாடாக விளங்கும் அமெரிக்காவில், இதுவரை ஒரு கோடியே 47 லட்சத்து 72 ஆயிரத்து 535 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இரண்டு லட்சத்து 85 ஆயிரத்து 550 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை வைரஸ் தொற்றால் 58 இலட்சத்து 28 ஆயிரத்து 103 பேர் அங்குள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 26 ஆயிரத்து 153 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளனர்.

# அமெயுடன் மோதலுக்கு தயாராகுகின்றது சீனா!

## தேசிய உளவு அமைப்பின் இயக்குநர் தெரிவிப்பு



அமெரிக்காவுடன் மிகப் பெரிய மோதலுக்கு சீனா தயாராகி வருவதாகவும் அதனை எதிர்கொள்ள நாமும் தயாராக இருக்கவேண்டும் என அமெரிக்க தேசிய உளவு அமைப்பின் இயக்குநர் ஜான் ராட்கிளிஃப் தெரிவித்துள்ளார்.

நாளிதலொன்றுக்கு எழுதிய கட்டுரையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அந்த கட்டுரையில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

சீனாவால் அமெரிக்கா எதிர்கொண்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பாக எங்களுக்குக் கிடைத்துள்ள உளவுத் தகவல்கள் மூலம் மிகத் தெளிவாகத் தெரிகிறது. இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த தற்போதைய சூழலில், உலகில் அமெரிக்காவுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக சீனாதான் திகழும்.

அமெரிக்காவையும் உலகின் பிற நாடுகளையும் பொருளாதார ரீதியிலும் தொழில்நுட்ப ரீதியிலும் ஆக்கிரமிக்கும் நோக்கில் சீனா செயல்பட்டு வருகிறது. சீனாவின் பல்வேறு சர்வதேச திட்டங்கள், அந்த நாட்டை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் மறைமுகமான செயற்பாடுகளே ஆகும். 'திருடு, பிரதியெடு, இடத்தைப் பிடித்துக் கொள்' என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு சீனா பொரு ளாதார ரீதியிலான சதித் திட்டத்தில் ஈடுபட்டு வருகிறது. அமெரிக்க நிறுவனங்களின் அறிவுசார் சொத்துகளை சீனா திருடி வருகிறது. பிறகு அந்தத் தொழில்நுட்பத்தைப் பிரதியெடுக்கிறது. பிரதியெடுக்கப்பட்ட அந்தத் தொழில்நுட்பத்தைக் கொண்டு உலகச் சந்தையில் அமெரிக்க நிறுவனங்களை ஓரம் கட்டிவிட்டு, அந்த நிறுவனங்களின் இடங்களை சீனா பிடித்துக் கொள்கிறது.

அமெரிக்கா ஒவ்வொரு தலைமுறை காலகட்டத்திலும் சந்திக்கும் சவால்களில் ஒன்றுதான் தற்போது சீனாவிடமிருந்து எழுந்துள்ள அச்சுறுத்தலும்.

அந்த ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அமெரிக்கா சவாலை வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளது. பாசிஸத்தைத் தோற்கடித்தது முதல் (சோவியத் யூனியனின்) இரும்புத் திரையை தகர்த்தது வரை அமெரிக்கா அனைத்து அச்சுறுத்தல்களையும் வெற்றி கொண்டுள்ளது. இந்த வகையில், தற்போது சீனாவின் அச்சுறுத்தலையும் எவ்வாறு எதிர்கொள்கிறோம் என்பதைப் பொருத்தே இந்தத் தலைமுறை அமெரிக்கர்களின் திறன் முடிவு செய்யப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மே மாதம் முதல் தேசிய உளவு அமைப்பின் இயக்குநராகப் பொறுப்பு வகித்து வரும் ராட்கிளிஃப், இன்னும் சில வாரங்களில் நாட்டின் புதிய அதிபராக ஜோ பைடன் பொறுப்பேற்கவுள்ள நிலையில் சீனாவுக்கு எதிரான இத்தகைய கடுமையான கருத்துகளைத் தெரிவித்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஜோ பைடன் ஜனாதிபதியான பிறகு அவர் சீனாவுடன் நல்லுறவு ஏற்படுத்துவதை சிக்கலாக்கும் வகையில் ராட்கிளிஃப் இந்தக் கட்டுரையை எழுதியுள்ளதாகக் கூறப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# வெள்ளக் காடாக காட்சியளித்த யாழ் நகர் ...



















காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# 19 ஆவது திருத்தம் உருவாக்கப்படாவிட்டால் கடந்த அரசு 3 வருடத்தில் வீடு சென்றிருக்கும்

## அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிப்பு

மக்களுக்கு பிரச்சினை இருப்பதை அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் உணர்கின்றோம். அதற்காக இந்த அரசாங்கத்தை வீழ்த்த மக்கள் இடமளிக்கப்போவதில்லை. அதனால் எமது அரசாங்கத்தை இலகுவில் வீழ்த்தலாம் என கனவிலும் நினைக்கவேண்டாம். அத்துடன் 19 ஆம் திருத்தம் இல்லை என்றால் கடந்த அரசாங்கம் 3 வருடத்திலே வீட்டுக்கு சென்றிருக்கும் என ஆளுங்கட்சி பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் கைத்தொழில், வர்த்தக அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்:-

கடந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தமை முதல் எம்மை பழிவாங்கும் நடவடிக்கையையே மேற்கொண்டார்கள். சதொச நிறுவனத்தில் மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்து என் மீது பொய் குற்றச்சாட்டுக்களை புனைந்து சிறையில் அடைத்தார்கள். எமது காலத்தில் ஒருபோதும் சதொச நட்டமடையவில்லை. பாரியளவில் இலாபமீட்டும் நிறுவனமாக இருந்தது. ஆனால் கடந்த அரசாங்க காலத்தில் பாரியளவில் நட்டமடைந்துள்ளது.

அத்துடன் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதாகத் தெரிவித்து ஆட்சிக்கு வந்த இவர்கள், ஆட்சிக்கு வந்து 2 மாதங்களில் மத்திய வங்கியை கொள்ளையடித்தார்கள். மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தை பழிவாங்கும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ என அனைவரையும் பொய் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து சிறையில் அடைத்தார்கள்.

அவ்வாறு நாங்கள் செயற்பட்டிருந்தால் இன்று எதிர்க்கட்சியில் இருக்கும் அதிகமானவர்கள் சிறையில் இருந்திருப்பார்கள். ஆனால் நாங்கள் அவ்வாறு செயற்பட மாட்டோம்.

கடந்த அரசாங்கத்தின் பழிவாங்கலுக்கு ஆளாகி சிறையில் இருந்தவர்கள்தான் இன்று விடுதலையாகி இருக்கின்றார்கள். பிள்ளையான் எம்.பி. 5வருடம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அதேபோன்று துமிந்த சில்வா இன்னும் சிறையில் இருக்கின்றார். அதனால் ஜனாதிபதி துமிந்த சில்வாவுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

மேலும் கடந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததுடன் 19 ஆம் திருத்தத்தை கொண்டுவந்து ஆட்சியை பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்திருந்தது. அதனால்தான் கடந்த அரசாங்கம் நான்கரை வருடமாக இருந்தது. இல்லாவிட்டால் 3 வருடங்களில் வீட்டுக்கு சென்றிருக்கும். தேர்தல் நடத்த அச்சப்பட்டார்கள். பிரதேச சபை தேர்லைக் கூட வெற்றிகொள்ள முடியாமல் போன அரசாங்கமாகும். அதனால் தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொரோனாக் காரணமாக பொருளாதாரத்தில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அதனால் மக்களுக்கும் இன்று பிரச்சினை இருக்கின்றது என்பது எமக்கு தெரியும். அதனால் மக்களுக்கு தற்போது இருக்கும் பிரச்சினையைப் பயன்படுத்திக்கொண்டு இந்த அரசாங்கத்தை வீழ்த்தலாம் என கனவிலும் நினைக்க வேண்டாம். மக்கள் அதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள். - என்றார்

# பாதுகாப்பு அமைவிடங்களில் தங்கிய மக்கள் வீடுகளுக்கு!

வங்களா விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக ஏற்பட்ட புரெவி சூறாவளியின் தாக்கத்தின் முன்னெச்சரிக்கையாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கடற்கரையை அண்மித்த பகுதிகளில் குடியிருந்தவர்களின் பாதுகாப்பு கருதி கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் நான்கு பாதுகாப்பு அமைவிடங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

கருணாட்டுகேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை கொக்குளாய் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயம், கொக்குத்தொடுவாய் மத்தி ஆரம்பப் பாடசாலை ஆகிய 4 பாதுகாப்பு அமைவிடங்களில் 130 குடும்பங்களைச் சேர்ந்த 447 பேர் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த காலநிலையில் ஏற்பட்ட மாற்றத்தால் கடந்த வெள்ளிக்கிழமை மாலையில் பாதுகாப்பு அமைவிடங்களில் இருந்து மக்கள் அவர்களது சுயவிருப்பத்தின் அடிப்படையில் தமது குடியிருப்புக்களுக்குத் திரும்பியுள்ளனர்.

இந்த நிலையில் இன்று சனிக்கிழமை காலை உணவின் பின்னர் 9.30மணிக்கு மிகுதி இரண்டு பாதுகாப்பு அமைவிடங்களில் 92 குடும்பங்களை சேர்ந்த 282 பேர் தங்க வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் தமது வீடுகளுக்கு பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு பாதுகாப்பு அமைவிடத்தில் தனிமைப்படுத்தலுக்குட்பட்ட ஒரு குடும்பத்தை சேர்ந்த இரு அங்கத்தவர்கள் தங்கவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர்களுக்கு ஒரு வாரத்துக்கான உலருணவு நிவாரணம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மேற்கத்தேய மருந்துவத்தின் மருந்தை போதையாகப் பயன்படுத்த முடியாது!



## ராஜித விளக்கம்

மேற்கத்திய மருத்துவத்தில் போதைப் பொருளாக பயன்படுத்தக்கூடிய மருந்து எதுவும் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மஹர சிறைச்சாலையின் கைதிகள், மனநிலை சரியில்லாத நபர்களுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படும் மருந்துகளை உட்கொண்டதால் கட்டுக்கடங்காத முறையில் ஈடுபட்டதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ கூறியிருந்தார்.

அமைச்சர் விமல் வீரவன்ஸ நாடாளுமன்றில் தெரிவித்த கருத்து தொடர்பாக, இன்று (சனிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே ராஜித சேனாரத்ன இவ்வாறு கூறினார்.

கைதிகளின் மரணங்களை மறைக்கும் முயற்சியில் இதுபோன்ற அப்பட்டமான பொய்கள் கூறப்படுகின்றன என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

அத்தோடு குறித்த கருத்துக்கள் முட்டாள்தனமானவை என குறிப்பிட்ட ராஜித சேனாரத்ன இதனை தேசிய மனநல நிலையமும் மறுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# 269 இலங்கையர் நாடு திரும்பினர்!

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 269 இலங்கையர்கள் இன்று (சனிக்கிழமை) காலை நாட்டை வந்தடைந்தனர்.

இதற்கமைய, ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தின் அபுதாபி நகரில் இருந்து 101 பேரும், டுபாயில் இருந்து 76 பேரும், கட்டாரின் டோஹா நகரில் இருந்து 47பேரும் இந்தியாவின் சென்னை நகரில் இருந்து 45 பேரும் இவ்வாறு நாட்டை வந்தடைந்துள்ளனர்.

குறித்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நேற்றைய தினமும் 476 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்திருந்தனர். அவர்களும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைக்க முடியாமலிருப்பது அரசின் இயலாமையைக் காட்டுகிறது!

## ஆகவே இது தோல்வியடைந்த அரசாங்கம் என்கிறார் கபீர் ஹாசீம்

எமது அரசாங்கத்தில் விலை குறைக்கப்பட்டிருந்த அத்தியாவசிய பொருள்களின் விலை தற்போதைய அரசாங்கத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அரிசி விலையைக் கூட குறைக்க முடியாத அரசாங்கமாக மாறியுள்ளது. அதனால் இந்த அரசாங்கம் தோல்வியடைந்த அரசாங்கம் எனத் தெரிவிப்பதில் பிழை இல்லை என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கைத்தொழில், வர்த்தக அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்:-

எமது அரசாங்கத்தில் விலை குறைக்கப்பட்டிருந்த அத்தியாவசியப் பொருள்களின் விலை தற்போதைய அரசாங்கத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் பல்வேறு பொருள்களின் பெயர்களைக் குறிப்பிட்டு விலைகளைக் குறைப்பதாக அறிவித்த போதும் எந்தவொரு பொருளினதும் விலை குறைக்கப்படவில்லை. அரிசி விலையைக் குறைப்பதாக பல தடவைகள் தெரிவித்தனர்.

ஆதனைக்கூட செய்ய இயலாத அரசாங்கமாக இருக்கின்றது. அதனால் இந்த அரசாங்கம் தோல்வியடைந்த அரசாங்கம் எனத் தெரிவிப்பதில் பிழை இல்லை.

நிலையான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் முறையான பொருளாதார திட்டம் இருக்க வேண்டும். ஆனால் ஒரு வருடத்தில் ஒன்றையும் காணவில்லை. இது தொடர்பாக இவர்களிடம் முறையான கொள்கைத் திட்டம் இல்லாமையால், அவர்களாலேயே நாட்டின் அபிவிருத்திக்கும், இறைமைக்கும், நாட்டின் பாதுகாப்புக்கும் பாதிப்பு ஏற்படும் என்று அரசியல் மேடைகளில் கூறிய திட்டங்களை இப்போது இவர்கள் முன்னெடுத்து செல்கின்றனர்.

ஐக்கிய தேசிய கட்சியால் அரச சொத்துக்களை விற்பதாகக் குற்றச்சாட்டை முன்வைத்தனர். ஆனால் இவர்கள் வந்ததுடன் காலிமுகத்திடலில் 3 ஏக்கர் நிலத்தை சிங்கப்பூர் கம்பனிக்கு விற்றார்கள். கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையை இந்தியாவுக்கு கொடுக்க முயற்சிக்கின்றனர்.

சௌபாக்கிய கொள்கைத் திட்டத்தில் பணச் சலவைக்கு இடமில்லை என்று கூறிக்கொண்டு வரவு செலவுத் திட்டத்தில் வெளிநாடுகளில் இருக்கும் கறுப்புப் பணத்தை தூய்மைப்படுத்த வரிச் சலுகை வழங்குவதாகக் கூறுகின்றனர். அதேபோன்று வெளிநாட்டு முதலீட்டைக் கொண்டு வருவதாக அரசாங்கத்தில் உள்ளவர்கள் கூறுகின்றனர். ஆனால் ஒரு வருடம் கடந்தும் இவர்களால் முதலீடுகளைக் கொண்டு வர முடியாது போயுள்ளது.

20 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்த பின்னர் ஜனநாயகத்தை உதைத்துத் தள்ளியுள்ளனர். இந்த நாட்டுக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர். நாட்டின் ஜனநாயகம் இல்லாமல்போகும்போது முதலீட்டாளர்கள் வரமாட்டார்கள். கைத்தொழில் அமைச்சரான விமல் வீரவன்ஸவுக்கு வெள்ளைக் காரனை கண்டாலே காய்ச்சல் வந்துவிடும். அவரிடம் முதலீட்டாளர்கள் வருவார்களா? சிறைச்சாலை சம்பவத்தை சர்வதேச சூழ்ச்சியென்று கூறும்போது எப்படி அவர்கள் இங்கு வருவார்கள்.

அதேபோன்று கடந்த காலங்களில் நாங்கள் முன்னெடுத்த வேலைத்திட்டங்களை எதிர்த்து, அது தொடர்பாக மேடைகளில் முழங்கியவர்கள் இன்று அந்த திட்டங்களைத் தொடர்ந்து, தங்களுடையது என்று உரிமை கொண்டாட முயற்சிக்கின்றனர். அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான ஒப்பந்தம் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்றும் அந்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்வோம் என்று கூறிய போதும், ஒரு வருடம் கடந்தும் அதனை இரத்துச் செய்யப் போவதில்லை என்று ஜனாதிபதியே உறுதிப்படுத்தியுள்ளார். - எனறார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.12.2020 இல் வெளியிடப்பெற்றது.